


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற ”முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடம் பெற்ற சென்னை மாவட்ட அணிக்கு பரிசுக் கோப்பையை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. அருணா, மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு வீரர்–வீராங்கனைகள் ஆகியோரிடம் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள்” நிறைவு விழாவில், முதலமைச்சர் கோப்பை 2023 தொடர்பான ‘களம் நமதே’ புத்தகத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### “முதலமைச்சர் கோப்பை - 2023” - சிறந்த விளையாட்டு

# வீரர்கள் - வீராங்கனைகளுக்கு பரிசுக் கோப்பை - ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 27-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை - 2023” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாவட்ட அணிகளுக்கு பரிசுக் கோப்பைகளையும், 27வது தேசிய மகளிர் கால்பந்து போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு அணியை சார்ந்த 22 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது பாரம்பரிய விளையாட்டான கபடி, சிலம்பம் உட்பட 15 விளையாட்டுகளையும், பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இப்போட்டிகளை நடத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் முடிய நடைபெற்றன. இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் 3,76,000க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் ஜூலை 1ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 25 ஆம் தேதி வரை 17 இடங்களில் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் பங்கேற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தனியார் விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் 2000க்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதிகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி, வீரர்கள் வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்குச் செல்ல பேருந்து வசதிகள், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள் மற்றும் போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஆகியவை சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மாநகர போக்குவரத்துக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

“முதலமைச்சர் கோப்பை - 2023” மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களைச்சேர்ந்த 27,000க்கும் மேற்பட்ட வீரர்வீராங்கனைகள் பங்கேற்று விளையாடினர். இதில் சென்னை மாவட்டம், 61 தங்கம், 33 வெள்ளி மற்றும் 19 வெண்கலப் பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம், 18 தங்கம், 19 வெள்ளி மற்றும் 18 வெண்கலப் பதக்கங்கள் வென்று இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 15 தங்கம், 13 வெள்ளி மற்றும் 24 வெண்கலப் பதக்கங்கள் வென்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “முதலமைச்சர் கோப்பை - 2023”ல் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அணிகளுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார்.

இப்பரிசுக் கோப்பைகளை முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. அருணா, இரண்டாமிடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், மூன்றாமிடத்தைப் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாக கோயம்புத்தூர் - தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் கே. செல்வம், மற்றும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் பெற்று கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸில் ஜூன் 12 முதல் 28 வரை நடைபெற்ற 27வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் 2023 போட்டியில், முதலிடம் பெற்று தங்கப் கோப்பையை வென்று சாதனை படைத்த தமிழ்நாடு அணியை சார்ந்த டி.தேவி, என். சௌமியா, பி. தனலட்சுமி, எஸ்.கௌசல்யா, என். லாவண்யா, எம்.பவித்ரா, பி.துர்கா, எஸ்.சண்முகப்பிரியா, எம்.சுபாஷிணி, எம். பரமேஸ்வரி, எஸ். பிரியதர்ஷினி, எம். மாளவிகா, எம்.நந்தினி, ஏ. கார்த்திகா, கே. இந்துமதி, ஆர். வினோதினி, எஸ். ஐஸ்வர்யா, ஆர். சந்தியா, பி.சந்தியா, எஸ். சண்முகப்பிரியா, ஆர். யுவராணி, என். அம்சவள்ளி ஆகிய 22 வீராங்கனைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 55 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) சார்பில் 5 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை உயரிய ஊக்கத்தொகையாக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த 26.6.2021 முதல் 12.07.2023 வரை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1684 விளையாட்டு வீரர்களுக்கு 49 கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநாகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அயலக தி.மு.க. மலேசிய மற்றும் அயலக தமிழ் இந்தியர்கள் அமைப்பு சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அயலக தி.மு.க. மலேசிய தலைவர் ஃபிர்தவ்ஸ் மற்றும் துணைத்தலைவர் ஜெய்லானி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு அயலக நலத்துறை உறுப்பினர் லண்டன் ஃபைசல், டத்தோ ஷாஹுல் HRD, ஈமான் பேரவையின் துணைச்செயலாளர் காசிம், துவான் ஜஃபருல்லா, துவான் கஸ்ஸாலி, புக்கிட் ஜலீல், மற்றும் ஏராளமான தமிழ் உணர்வாளர்கள், பத்திரிக்கையாளர்கள், தி.மு.க. சொந்தங்கள் என கலந்து கொண்ட நிகழ்வில், பேராசிரியர், முனைவர் ஆனந்தராஜா எழுதிய அமைதிக்கல்வி, விழுமக்கல்வி என்ற புத்தகத்தை தொல்.திருமாவளவன் வெளியிட லண்டன் ஃபைசல் மற்றும் மலேசிய தொழில் அதிபர் ஜஃபருல்லா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

### சாகித்ய அகாதெமி வெளியீடு!

# “இந்திய இலக்கியச் சிற்பிகள் - கலைஞர் மு.கருணாநிதி!”

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - நூலாசிரியர் முனைவர் மு. இராசேந்திரன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 27-

சாகித்ய அகாதெமி வெளியீடான “இந்திய இலக்கியச் சிற்பிகள் - கலைஞர் மு.கருணாநிதி” நூலை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி தான் எழுதி, சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள “இந்திய இலக்கியச் சிற்பிகள் - கலைஞர் மு. கருணாநிதி” நூலினை வழங்கினார்.

தமிழை நவீனமாக்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சமகாலச் சிந்தனைகளோடு பொருத்தித் தமிழை அகப்புற நவீனம் ஆக்கியவர். மரபை விதையாக்கி, வெளியுலகச் சிந்தனையை எருவாக்கிக் கொண்டு தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பொது மக்களிடம் கொண்டு சென்றவர்.

12 வயதில் ‘செல்வ சந்திரா’ புதினம் எழுதியவர், 14 வயதில் திருவாரூர் வீதிகளில் தமிழ்க் கொடி ஏந்திப் போராடியவர், 15 வயதில் ‘மாணவ நேசன்’ பத்திரிகை நடத்தியவர், 18 வயதில் அண்ணாவின் திராவிட நாட்டில் ‘இளமைப்பலி’ எழுதியவர், 18 வயதில் முரசொலி மாத இதழ் தொடங்கியவர், 20 வயதில் ‘சாந்தா அல்லது பழனியப்பன்’ நாடகம் எழுதி நடித்தவர்,

21 வயதில் பெரியாரின் குடியரசில் துணை ஆசிரியர் ஆனவர், 25 வயதில் திரைத்தமிழைத் திருத்தத் தொடங்கியவர், 32 வயதில் சாக்ரடீசுக்குக் கிரேக்கம் வழங்கிய தீர்ப்பினைத் திருத்தி ‘இரேக்கப் பெரியார்’ நாடகம் போட்டவர், 92 வயதில் இராமானுஜர் பற்றிய தொலைக் காட்சித் தொடர் தந்தவர்.

இவ்வாறு கவிதை, கதை, புதினம், கட்டுரை, நாடகம், திரைப்படம், தொலைக் காட்சித் தொடர் என்று பல வகைப் பாடுகளிலும் வாகை சூடியவர். கால மாற்றக் கலை வெளிப்பாட்டுக்குக் கை கொடுத்து, கணினி, இணையம், சமூக ஊடகத் தொழில் நுட்பங்களோடு கை கோர்த்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கலை இலக்கியப் பங்களிப்பு அவரது அரசியல் மற்றும் அவரது வரலாறு ஆகியவற்றின் பின்னணியில் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களால் தொகுக்கப்பட்ட “இந்திய இலக்கியச் சிற்பிகள் - கலைஞர் மு.கருணாநிதி” என்ற நூலினை சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, சென்னை சாகித்ய அகாதெமி அலுவலர் சந்திரசேகர ராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் முனைவர் சீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

